மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்
அசல் வழக்கு எண். 541/2021

**2022–ம் ஆண்டு ஜீலை மாதம் 15 ம் நாள் வெள்ளி கிழமை** வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW–1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. விஜயா, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கலையரசன் | தொழில் | : எலக்ட்ரீசியன் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : ஆதிமூலம் | வட்டம் | :குன்னம் |
| கிராமம் | :கீழப்பெரம்பலூர் | சமயம் | : – |
| சாதி | : – | வயது | : 37 /2022 |

**அரசு தரப்பு முதல் விசாரணை**

நான் தாவா வழக்கில் 1–ம் வாதி ஆவேன். என்னால் தாக்கல் செய்யப்படும் நிரூபன வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதை என் தரப்பு முதல் விசாரணையாக ஏற்க வேண்டுகிறேன். 18.01.1982 ம் ஆண்டு கிரைய பத்திரம் அசல் தாக்கல் செய்கிறேன் அது வா.த.சா.ஆ 1 ஆகும். 26.07.2010 ம் தேதியிட்ட தான செட்டில்மென்ட் பத்திரம் அசல் தாக்கல் செய்கிறேன் அது வா.த.சா.ஆ 2 ஆகும். வாதி பெயரில் உள்ள தோராய மனைவரி பட்டா அசல் தாக்கல் செய்கிறேன் அது வா.த.சா.ஆ 3 ஆகும். வாதி மற்றும் அவரது தகப்பனார் பெயரில் உள்ள வீட்டு வரி ரசீதுகள் (எண்ணிக்கை 5) அசல் தாக்கல் செய்கிறேன் அது வா.த.சா.ஆ 4 ஆகும். வழக்கு சொத்திற்கு வாதியின் தகப்பனார் பெயரில் உள்ள மின் கட்டண ரசீதுகள்(எண்ணிக்கை 2) அசல் தாக்கல் செய்கிறேன் அது வா.த.சா.ஆ 5 ஆகும். வழக்கு பின்னிட்டு வாதி தகப்பானர் பெயரில் உள்ள வீட்டுவரி ரசீது (எண்ணிக்கை 3 ) அசல் தாக்கல் செய்கிறேன் அது வா.த.சா.ஆ 6 ஆகும். மேற்கண்ட ஆவணங்கள் அனைத்தும் பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனையுடன் தாக்கல் செய்யப்படுகிறது.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்குரையில் உள்ள சங்கதிகளை நான்தான் தெரிவித்தேன் என்றால் சரிதான். அந்த வழக்குரையில் இந்த வழக்கின் பிரதிவாதிகள் என் தந்தையுடன்

பிறந்தவரகள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் மற்றும் என் அப்பாவை சேர்த்து நான்குபேர் வாரிசுகள் என்றால் சரிதான். நான் வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் 2019 ம் வருடம் வரை தாவா சொத்து காலி மனை என்றுதான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் வீடு இல்லா போது நான் வழக்குரையோடு தாக்கல் செய்துள்ள வீட்டு வரி ரசீதுகள் மற்றும் மின் கட்டண ரசீதுகள் தாவா சொத்துக்களோடு தொடர்புடையது இல்லை என்றால் சரியல்ல. என் அப்பாவிற்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்பது எனக்கு ஞாபகம் இல்லை அதேபோல் பிரதிவாதிகளுக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்பதும் எனக்கு தெரியாது. என் அப்பா எனக்கு 2010 ம் ஆண்டு தான செட்டில்மென்ட் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம்தான் அது என்றால் சரிதான். இந்த ஆவணத்திலாவது மேற்படி சொத்து வீடுகள் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தின் சர்வே நம்பர் என்ன வென்று எனக்கு தெரியாது. தற்போது நீதிமன்றத்திற்கு வந்து சாட்சியம் அளிக்கும் வரை தாவா சொத்தில் சர்வே எண் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்து பூரிவீகத்தில் இருந்து எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்டது. என் வழக்குரையிலும் முதன்மை வாக்குமூலத்திலும் எனது அப்பா வெளிநாடு சென்று சம்பாதித்து தாவா சொத்தை வாங்கினார் என்று குறிப்பிட்டுள்ளேன் அதற்கு ஆதரவாக எனது அப்பாவினுடைய கடவு சீட்டு ஆவணமாக கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் மேற்படி கடவு சீட்டு தொலைந்துவிட்டது. எனது அப்பா வெளிநாடு சென்று வேலை பாரத்தார். எனது அப்பா தற்போது உயிருடன்தான் இருக்கிறார். எனது அப்பா வெளிநாடு சென்றது தொடர்பாக பாஸ்போர்ட் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்து டூப்ளிகேட் பாஸ்போர்ட் பெற முடியும் என்றால் சரிதான். எனது அப்பாவை நீதிமன்றத்தில் சாட்சியாக விசாரிக்க நான் தயாராக உள்ளேன். எனது அப்பாவிற்கு கடவு சீட்டு கிடையாது என்றாலும் அவர் வெளிநாடு

செல்லவில்லை என்றாலும் சரியல்ல. எனது வழக்குரையில் 28.11.2018 ம் தேதி பிரதிவாதிகள் சம்பவ இடத்திற்கு வந்து வீண் பிரச்சனை செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான் அது தொடர்பாக காவல் நிலையத்தில் புகாரோ அல்லது பிரதிவாதிகளுக்கு முன் அறிவிப்போ கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். அந்த சம்பவ சமயத்தில் பஞ்சாயத்தார்கள் வந்து பேசியது தொடர்பாக ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதை எழுத சொன்னவர்களே எடுத்து சென்று விட்டார்கள். நான் சொல்வதுபோல் பஞ்சாயத்து எதுவும் நடைபெறவில்லை என்றாலும் பிரதிவாதிகள் வீண் பிரச்சினை செய்ய வில்லை என்றால் சரியல்ல. பஞ்சாயத்து பேசியபோது சுமார் 4 , 5 நபர்கள் வந்திருந்தார்கள். அவர்கள் என்ன பேசினார்கள் என்று கூட தெரியாது. பஞ்சாயத்தார்களின் பெயர் எனக்கு தெரியாது. என்ன பரிகாரம் கேட்டு இந்நீதிமன்றத்தில் வழக்கு போட்டேன் என்றால் வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என் பெயரை வைத்து என் அப்பாதான் போட்டார். இவ்வழக்கில் வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து மட்டும்தான் என்னுடையது அதில் என்ன சங்கதிகள் உள்ளது என்று எனக்கு தெரியாது. என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. இவ்வழக்கில் பிரதிவாதிகள் என்ன எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரமும் எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் என்ன விபரம் குறிப்பிட்டுள்ளார்கள் என்று நான் எனது வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் 21.12.1996 ம் தேதியிட்ட பாக பிரிவினை பத்திரத்திலும் அதே தேதியிட்ட மற்றொரு பாகபிரிவினை பத்திரத்திலும் உள்ளது எனது தந்தையின் கையெழுத்துதானா என்றால் இல்லை கையெழுத்து சற்று மாறி இருக்கிறது. தற்போது என்னிடம் காட்டப்படும் 06.01.1994 ம் தேதியிட்ட கூட்டுப்பட்டாவில் வெங்கிட்டன் , ஆதிமூலம் , சுப்பிரமணி ஆகிய 3 பேர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் 3-ம் பிரதிவாதியான கருணாநிதியின் பெயர் இல்லை என்றால் சரிதான். அவர் 28 ஆண்டுகள் ஊரில் இல்லை. 06.01.1994 ம் தேதியிட்ட கூட்டுப்பட்டா

பி.வா.த.சா.ஆ 1ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1994 ம் வருடம் கூட்டுப்பட்டா உள்ள நிலையில் அந்த சொத்து 1982லேயே கூட்டுக்குடும்ப வருமானத்தை வைத்து பெயரளவில் எனது தந்தை பெயரில் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு விபரம் தெரியாது என்றாலும் தாவா சொத்து பூர்வீக சொத்து என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து பூர்வீக சொத்து என்பதால்தான் 21.12.1996 ம் ஆண்டு எனது தந்தை மற்றும் 1,2 பிரதிவாதிகள் சேர்ந்து பாக பிரிவினை பத்திரம் ஏற்படுத்திக்கொண்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. வழக்கில் தாக்கல் செய்துள்ள எந்த ஆவணமும் தாவா சொத்திற்கு உரியது அல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் கடந்த ஆண்டுதான் வீடு கட்டினோம் என்றால் சரிதான். வழக்கிற்கு பின்னிட்டுதான் வீடு கட்டினோம் என்றால் சரிதான். என்னுடைய வழக்குரையிலும் தற்போது தாக்கல் செய்துள்ள முதன்மை நிரூபண வாக்குமூலுத்திலும் தாவா இடத்தில் பாதி பகுதியில் 2016 ம் ஆண்டு வீடு கட்டியுள்ள தகவலை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் 2016 ம் ஆண்டு தாவா இடத்தில் வீடு கட்டி இருந்து அதில் பிரதிவாதிகள் ஆட்சேபனை தெரிவித்திருந்தால் நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையிலேயே வழக்கறிஞர் ஆணையரை நியமனம் செய்ய சொல்லி மனு தாக்கல் செய்ய சொல்லி இருப்பேன் என்றால் சரிதான். நாங்கள் குடியிருக்கும் வீட்டிற்கு கிழக்குப்பகுதியில் தியாகராஜன் உள்ளாரா என்றால் சேப்பெருமாள் உள்ளார். நான்